தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 9, ஆங்கிரச திருவள்ளுவர் ஆண்டு 2023

1992, ஏப்ரல் 21, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும் வேளாண் தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் வேளாண்மைத் தொழிலே சிறந்தது ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 570, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு நிதியமைச்சர்.

570— புதிதாக வாக்குச்சாவடி அமைத்தல்.

*5180—திரு. வ. சத்தியமூர்த்தி :
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கடலாடி ஒன்றியத்தில் உள்ள வாளம்பட்டி, கீழக்கிடாரம் நாடார் குடியிருப்பு (காவாகுளம்), பூப்பாண்டியபுரம், அண்ணமுவ நாயக்கன்பட்டி, டி. ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் புதிதாக வாக்குச்சாவடி அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய வாக்குச்சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ). மற்றும் (ஆ) இக்கிராமங்களில் புதியதாக வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

[1992 ஏப்ரல் 21

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 பொதுத் தேர்தல்களிலும் இந்த வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற கிராமத்து வாக்காளர்கள் எங்களுக்கு தனியாக வாக்கு சாவடி வேண்டும் இல்லையென்று சொன்னால் தேர்தலில் கலந்துகொள்ள மாட்டோம் என்று சுற்றறிக்கை மூலம் தெரிவித்து போராட்ட வடிவில் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்ததின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரில் வட்டாட்சியரும் கோட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த கிராமங்களுக்கு நேரிடையாக சென்று அவர்களை சமாதானப் படுத்தி வாக்களிக்கச் செய்திருக்கிறார்கள். இதில் காவாகுளம் என்ற கிராமத்தில் ஏற்கெனவே வாக்கு சாவடி இருந்ததை கீழ்க் கிடாரம் என்ற ஊருக்கு மாற்றியிருக்கின்றார்கள். அதுபோல அண்ணகுவன் நாயக்கன் பட்டி என்ற பேருந்து செல்லும் வழித் தடத்தில் உள்ள கிராமத்தினை, பேருந்து செல்ல முடியாத ஒரு கிராமத்தோடு இணைத்திருக்கிறார்கள். 6 கிலோ மீட்டர் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அதேபோல வாளம்பட்டி என்ற கிராமத்தில், அருகில் உள்ள பேருந்து செல்லுகிற சேவல்பட்டியில் வாக்களிக்க இருந்தவர்களை, தற்போது முத்துராமலிங்கபுரம் என்ற பேருந்து செல்ல முடியாத ஒரு கிராமத்தில் கொண்டு வந்து இணைத்திருக்கிறார்கள். ஆகவே வசதியான இடத்தில் வாக்களித்தவர்களை வசதியற்ற இடத்திற்கு மாற்றுவதோடு மட்டும் அல்லாமல் புதிதாகவும் வாக்கு சாவடி கேட்கிற ஒரு சில கிராமத்திற்கும் சேர்த்து, வரப்போகிற பொதுத் தேர்தலுக்கு முன்பு ஆய்வு செய்வதற்காவது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பணிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி சட்டமன்ற தொகுதியில் உள்ள வாளம்பட்டி, கீழ்க்கிடாரம், நாடார் குடியிருப்பு, பூப்பாண்டியபுரம், அண்ணகுவன்நாயக்கன்பட்டி, டி. ஆலங்குலம் ஆகிய கிராமங்களில் புதியதாக வாக்கு சாவடிகள் அமைக்க வேண்டும் என்று விண்ணப்பம் ஏதும் மாவட்ட ஆட்சி தலைவர் மூலமோ அல்லது மற்றவர்கள் மூலமோ பெறப்படவில்லை என்று ராம்நாதபுரம் மாவட்ட ஆட்சி தலைவர் தகவல் தந்துள்ளார். பூப்பாண்டியபுரம் கிராமத்தில் உள்ள வாக்காளர்களை தவிர மற்ற கிராமங்களில் உள்ள வாக்காளர்கள் 2 கிலோ மீட்டர் மிகாமல் நடந்து சென்று வாக்களிக்கும் வகையில் வசதியாக வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பூப்பாண்டியபுரம் கிராமத்தை பொறுத்த மட்டில் அந்த கிராமத்தில் உள்ள வாக்காளர்கள் மூக்கையூர் கிராமத்தில் உள்ள வாக்கு சாவடிகளோடு இணைக்கப்பட்டுள்ளனர். பூப்பாண்டியபுரம் கிராமத்தில் உள்ள வாக்காளர்கள் மூக்கையூர் கிராமத்தில்

1992 ஏப்ரல் 21]

உள்ள வாக்கு சாவடிகளுக்கு நல்ல சாலை வழியாகச் சென்றால் 5 கிலோ மீட்டருக்கு மேல் நடக்க வேண்டியிருக்கிறது. ஆனால் குறுக்குவழியில் சென்றால் 2 கிலோ மீட்டர் தூரம் தான் நடக்க வேண்டும். பொதுவாக பூப்பாண்டியபுரம் கிராம மக்கள் மூக்கையூர் செல்ல இந்த குறுக்கு வழியையே பின்பற்றுகிறார்கள். பூப்பாண்டியபுரத்தில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 232 தான். புதியதாக தனி வாக்குச் சாவடிகள் அமைக்கும்போது வாக்காளர்களின் எண்ணிக்கையும் கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த கிராமத்து வாக்காளர்களிடமிருந்து தங்களுக்கு தனி வாக்குச் சாவடி அமைத்துத்தர வேண்டும் என்ற விண்ணப்பம் ஏதும் இதுவரையில் பெறப்படவில்லை. மேலும், வாக்காளர் பட்டியலை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தீவிர முறையில் திருத்தப்பட்டு புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. 1993-ல் தீவிர முறையில் வாக்காளர் பட்டியல் திருத்தப்படலாம். அவ்வாறு வாக்காளர் பட்டியல் தீவிர முறையில் திருத்தப்படும்போது வாக்கு சாவடிகளில் இணைக்கப்பட உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருந்தால், வாக்கு சாவடிகளை மாற்றி அமைக்கவும் பிற காரணங்களுக்காக வாக்குசாவடிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு அதற்கு ஏற்ப வாக்காளர் பட்டியலும் தயாரித்து அச்சடிக்கப்படும். அப்போது வேண்டுமானால் பூப்பாண்டியபுரம் வாக்காளர்களின் வசதிக்காக அவர்களை வேறு வாக்கு சாவடிகளோடு இணைக்க முடியுமா அல்லது பூப்பாண்டியபுரத்தில் போதுமான அளவுக்கு வாக்காளர்கள் இருந்து அங்கேயே அமைக்க முடியுமா என்பதைப்பற்றி ஆராயலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 571 திரு. வி. பி. சந்திரசேகர்; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

571—

நீதி மன்றங்களை ஒரே இடத்தில் அமைத்தல்

*3903—திரு. வி. பி. சந்திரசேகர் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொள்ளாச்சி நகரில் பல இடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களை ஒரே இடத்தில் அமைக்க அரசு முன் வருமா?